சுற்றுலாதலமான ஏலகிரி மலையில்

₹3 கோடியில் சாகச பாராகிளைடிங் அமைக்கும் பணி

சுற்றுலா தலமான ஏலகிரி மலையில் உள்ள இயற்கை பூங்காவை முதன்மை செயலாளர் காகர்லா உஷா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கலெக்டர் பாஸ்கர பாண்டியன். அடுத்தபடம்: பாராகிளைடிங் நடைபெற உள்ள இடத்தில் கட்டிட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

முதன்மை செயலாளர் ஆய்வு

ஏலகிரி, டிச.13: சுற்றுலாதலமான ஏலகிரி மலையில் ₹3 கோடி மதிப்பில் சாகச பாராகிளைடிங் அமைக்கும் பணியை சுற்றுலாத் துறை முதன்மை செயலாளர் காகர்லா உஷா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருப்பத்தூர் மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தலமாக ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலை விளங்கி வருகிறது. ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்று இயற்கை எழில் மிகுந்த சூழல் காணப்படுவதால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, புதுச்சேரி போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். சுற்றுலா பயணிகள் வருகை தொடர்ந்து அதிகரித்து வருவதால் அரசு சார்பில் சுற்றுலா தலத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு பணிகள் நடந்து வருகிறது.

அதன்படி, ஏலகிரி மலை ஊராட்சி, அத்தனாவூர் கிராமத்தில் 7.09 ஏக்கர் பரப்பளவில் ₹3 கோடி மதிப்பில் சாகச பாராகிளைடிங் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதற்கான கட்டுமான பணிகளை முதன்மை செயலாளரும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஆணையருமான காகர்லா உஷா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து படகு இல்லம் மற்றும் இயற்கை பூங்காவை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது கலெக்டர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் செல்வராசு, சுற்றுலாத்துறை திட்ட பொறியாளர் பால், சுற்றுலா அலுவலர் ஆனந்தன், ஆர்டிஓ பானு, உதவி இயக்குனர் ஊராட்சிகள் விஜயகுமாரி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜஸ்ரீ கிரிவேலன், கிராம நிர்வாக அலுவலர் சிவக்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

மின் கட்டணம் செலுத்த

கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும்

கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்

சென்னை, டிச.13:. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கனமழை காரணமாக மின் கட்டணம் செலுத்தும் கடைசி நாள் கடந்த 4ம் தேதி முதல் 7ம் தேதி வரை மின்கட்டணம் செலுத்த வேண்டிய மின் நுகர்வோர்களுக்கு வரும் 18ம் தேதி வரை அபராதமின்றி மின் கட்டணம் செலுத்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நான்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மின்நுகர்வோர்களும் பயன்பெறும் வகையில் அபராதமின்றி மின் கட்டணம் செலுத்துவதற்கு வரும் 30ம் தேதி வரை நீட்டிக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

ZEE LABORATORIES
5 கோடிக்கும் அதிகமான திருப்தியடைந்த பயனாளிகள்
MYFAIR Cream
MYFAIR
தோற்றத்தை மேம்படுத்துகிறது & சருமத்தைப் பொலிவாக்குகிறது
வடுக்கள், சுருக்கங்களுக்கு எதிரானது
தோலின் கரும்திட்டுகளை மங்கச் செய்கிறது
கறை இல்லாத சருமம்
www.myfair.in
9896277535 & 9896134500
கிரீம் • சோப் • பேஸ் வாஷ்
ஒரு முழுமையான அழகுசாதன ரகம் • அனைத்து முன்னணி மருந்துக் கடைகளில் கிடைக்கிறது

முதல்வரிடம் அமைச்சர் எ.வ.வேலு ₹2 கோடி நிதி

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, தமிழ்நாடு கடல்சார் வாரிய நிதியிலிருந்து ₹2 கோடிக்கான காசோலையை வழங்கினார். அருகில், கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், கடல்சார் வாரிய துணை தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் சி.நடராசன், மாநில துறைமுக அலுவலர் ம.அன்பரசன்.

வெள்ளம் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில்

இலவச நிலவேம்பு குடிநீர் ஆட்டோக்களில் விநியோகம்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, டிச.13: சென்னையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பேட்டி: வெள்ளம் அதிகம் பாதித்த தென் சென்னை பகுதிகளில், சைதாப்பேட்டை அடையாற்றங்கரையோரம், விருகம்பாக்கம் அடையாற்றங்கரையோரம், வேளச்சேரியில் அடையாற்றங்கரையோரம், சோழிங்கநல்லூரில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து 60க்கும் மேற்பட்ட ஏரிகளில் இருந்து திறந்து விடப்பட்ட மழைநீரால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கரனை, மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மதுரவாயல் பகுதி மக்களுக்கு 50 ஆட்டோக்கள் மூலம் நிலவேம்பு குடிநீர், நிலவேம்பு குடிநீர் பாக்கெட்டுகள் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை சார்பில் தமிழ்நாட்டில் 1,542 சித்த மருத்துவ மையங்கள் இருக்கின்றது. இம்மையங்களுக்கு ₹45 லட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

எண்ணூரில் எண்ணெய் கசிவு

பாதிப்புக்கு சிபிசிஎல் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும்

மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவு

சென்னை, டிச.13: எண்ணூரில் எண்ணெய் கசிவால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சிபிசிஎல் நிறுவனம் உரிய இழப்பீடு வழங்கவேண்டும் என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட அறிக்கை:

எண்ணூர் சிற்றோடை பகுதியில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிய சிபிசிஎல் மற்றும் பிற தொழில் நிறுவனங்களில், ஒரு குழு நேற்று முன்தினம் ஆய்வு செய்தது, இந்த ஆயிவின் அறிக்கையில் சிபிசிஎல் நிறுவன வளாகத்தில் முறையாக மேற்கொள்ளப்படாத மழைநீர் வடிகால் பணிகள் காரணமாக அந்நிறுவனத்தில் இருந்து எண்ணெய் கசிவு பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக எண்ணூர் சிற்றோடைக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சிபிசிஎல் நிறுவனத்துக்கு, பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சிபிசிஎல் நிறுவனம் பக்கிங்ஹாம் கால்வாய், எண்ணூர் சிற்றோடைகள் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் எண்ணெய் படிவுகள், எண்ணெய் படலங்கள் தேங்கி நிற்கும் இடங்களை கண்டறிந்து போர்க்கால அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிறுவனத்தின் இரண்டாம் நிலை அலகுகளில் அனைத்து குழாய்கள் மற்றும் தொட்டிகள் கசிவு இல்லாமல் சரியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். விதிமுறைகளை மீறி வெளியேற்றினால், மாசு கட்டுப்பாடு சட்டம் 1974ன் கீழ் தொழிற்சாலையின் செயல்பாடுகள் முடக்கப்படும்.

சுற்றுச்சூழல் சேதங்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதோடு, எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட, வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு சிபிசிஎல் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும். மேலும் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் கசிவு கண்டறிதல் மற்றும் பழுதுபார்ப்பு ஆய்வை மேற்கொண்டு உடனடியாக வாரியத்திடம் சிபிசிஎல் நிறுவனம் அளிக்க வேண்டும். ஒரு சிறந்த தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து, எண்ணெய் பரவும் பகுதிகளைக் கண்டறிந்து, உடனடியாக செயல்திட்டத்துடன் அறிக்கையை வாரியத்திடம் வழங்க வேண்டும். எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆவின் VRD-793 சிவகங்கை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
ஓ.சிறுவயல் ரோடு, கழனிவாசல், காரைக்குடி-2

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்:6267/பா.உ/2022. **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இவ்வொன்றியத்தால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு கீழ்கண்டவாறு ஊர்தி இயக்க விலைப்புள்ளிகள் (தொழில் நுட்பம் மற்றும் வணிக நுட்ப புள்ளிகள்) இணையதள டெண்டர் மூலமாக வரவேற்கப்படுகின்றன.

வ.எண்	வழித்தடங்களின் விபரம்	எண்ணங்கள்	வாகன விபரம்
1	பால் சேகர வழித்தடங்கள்	7	1.200 மெட்ரிக் டன் அதற்கு மேல் கொள்ளளவு உடைய வாகனம் -7
		1	0.700 மெட்ரிக் டன் அதற்கு மேல் கொள்ளளவு உடைய வாகனம் - 1

முழுமையான விபரங்களுக்கு **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடவும்,ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் இலவசமாக **14.12.2023** முதல் **03.01.2024** வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கு கடைசி நாள் **03.01.2024** மற்றும் நேரம் **முற்பகல் 11.00** மணி வரை மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் **03.01.2024** நேரம் **காலை 11.00** மணி.

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் **03.01.2024** நேரம் **காலை 11.30 மணி** இடம் காரைக்குடி தலைமை அலுவலகம்.

டெண்டர் தொடர்பான முன்கலந்தாய்வு கூட்டம் காரைக்குடி தலைமை அலுவலகத்தில் **20.12.2023** அன்று **காலை 11.00** மணியளவில் நடைபெறும்.

செ.ம.தொ.இ./6597/ஒப்பந்தப்புள்ளி/2023 **பொது மேலாளர்.**

TNRDC TAMIL NADU ROAD DEVELOPMENT COMPANY LTD.
Tamil Nadu Road Development Company Ltd.
TENDER NOTICE (Online only)

Tender Notice No: TNRDC/CD/020/2023 **Date: 11.12.2023**

The Managing Director, M/s. TamilNadu Road Development Company Ltd.(TNRDC), R.A Puram, Chennai- 600 028 invites percentage bids under two cover system through online only for implementation of the following works in **Chennai Outer Ring Road(CORR), Tamil Nadu upto 23.01.2024, 3.00 PM.**

S. No.	Description of Works	Indicative value of work inclusive of GST(Rs)	EMD / Bid Security value (Rs)	Bid Document Cost inclusive of GST (Rs)	Period of completion
1.	Appointment of the Agency for managing Toll Plazas and Toll Collection Operations in all the 4 Toll Plazas at Chennai Outer Ring Road (CORR) for one year	615.00 Lakhs	6,15,000/-	17,700/-	12 months

Details of works, availability of tender documents and all other details are available from **15.12.2023 to 23.01.2024, 3.00 PM** in the website **https://tntenders.gov.in.** In case of any changes / corrections etc on the above, the same will be published in the above website only.

Managing Director
DIPR/6581/TENDER/2023 **TamilNadu Road Development Company Ltd.**

தமிழ்நாடு அரசு
நகர ஊரமைப்பு இயக்ககம் (டி.டி.சி.பி)

எண்.8743/2023/TCP3 **நாள்: 11.12.2023**

நகர ஊரமைப்பு இயக்ககம் (டி.டி.சி.பி) இ-டெண்டரிங் செயல்முறையின் மூலம் விரிவான வளர்ச்சி திட்டம் தயாரித்தலுக்கான ஆலோசகர் நியமன பணிக்காக தகுந்த வகுப்பில் tntenders போர்ட்டலில் பதிவு செய்த அனுபவம் வாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து ஆன்லைன் டெண்டர்களை அழைக்கிறது.

ஆர்வமுள்ள நிறுவனங்கள் **www.tntenders.gov.in** என்ற இணையதளத்தில் டெண்டரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். குறிப்பு விதிமுறைகள், தகுதி அளவுகோல்கள் மற்றும் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் டெண்டர் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

வைப்புத் தொகை ரூ.2,00,000/–. டெண்டர்கள் **www.tntenders.gov.in** என்ற இணையதளத்தில் **19.01.2024** அன்று அல்லது அதற்கு முன் **மதியம் 3.00 மணிக்குள்** பதிவேற்றம் செய்யப்பட வேண்டும், மேலும் **19.01.2024** அன்று **மாலை 4.00 மணிக்கு** திறக்கப்படும்.

வெளியீடு : இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்ககம், இ மற்றும் சி மார்க்கெட் சாலை, சிஎம்டிஏ வளாகம், 3 ஆம் தளம், கோயம்பேடு, சென்னை – 600 107.

செ.ம.தொ.இ/6593/ஒப்பந்தப்புள்ளி/2023 **நகர் ஊரமைப்பு இயக்குநர்.**

ஆரணி அருகே வரதட்சணை கேட்டு

தாம்பத்ய உறவை சமூக வலைதளங்களில் பரப்புவதாக காதல் மனைவிக்கு மிரட்டல்

கணவன், மாமியாருக்கு போலீஸ் வலை

ஆரணி, டிச.13: திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அடுத்த சிறுமூர் கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண்ணும் வேலூர் மாவட்டம் கீழ்வல்லம் கிராமத்தைச் சேர்ந்த மேகநாதனும்(35), கடந்த 2011ம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். மேகநாதன் கடந்த சில மாதங்களாக வேலைக்கு செல்லாமல் போதையுடன் வீட்டிற்கு வந்து மனைவியை செக்ஸ் சித்ரவதை செய்து வந்ததாக தெரிகிறது.

இதனால், கணவன், மனைவி இருவருக்கும் அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. அதோடு கணவரும் மாமியாரும் சேர்ந்து இளம்பெண்ணிடம் உங்கள் வீட்டில் இருந்து நகை, பணம் வாங்கிவர வேண்டும் என்று சொல்லி மிரட்டினார்களாம். இதனை இளம்பெண் பெற்றோர்களிடம் தெரிவித்து அழுததால் பெற்றோர்கள் மகளை வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

இந்நிலையில், இளம்பெண்ணை குடும்பம் நடத்த வரும்படி மேகநாதனின் தாய் உறவினர்கள் அழைத்துள்ளனர். மேலும், கணவன், மனைவி இருவரும் பேசாமல் இருந்து வந்த நிலையில், மேகநாதன் சில தினங்களாக மனைவியுடன் வீடியோ கால் மற்றும் போனில் பேசினாராம்.

அப்போது உனது வீட்டில் இருந்து ₹5 லட்சம், 5 சவரன் வாங்கி வரசொல்லி மிரட்டியதாக கூறப்படுகிறது.

மேலும், நாம் இருவரும் தாம்பத்ய உறவில் இருந்த போது செல்போனில் ரகசியமாக எடுத்த பல வீடியோக்கள் என்னிடம் உள்ளது. நான் சொன்னபடி வரதட்சணை வாங்கி வரவில்லையென்றால், அனைத்து வீடியோக்களையும் வாட்ஸ் ஆப் மற்றும் சமூகவலை தளங்களில் பரப்பி உன்னையும், உன் குடும்பத்தையும் தற்கொலை செய்து கொள்ள வைப்பேன் என மிரட்டினாராம்.

இதனால், மனவேதனை அடைந்த இளம்பெண் நேற்று ஆரணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், மகளிர் போலீசார் வழக்குபதிவு செய்து, தலைமறைவாக உள்ள கணவன், மாமியார் ஆகியோரை வலை வலை வீசி தேடி வருகின்றனர்.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2013 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும். பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036.

பிற்சேர்க்கை IV (விதி 8 (1) ஐ காண்க) சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்கான)

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கார்ப்பரேட்/ பதிவு அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இதன் பின் "கூறப்பட்ட சட்டம்" என்று குறிப்பிடப்படும்) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர் & உப–கடன்தாரர் ஆகியோரை அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளார். கீழே கையொப்பமிட்டவர் கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பினை வழங்கி, கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 சொல்லப்பட்ட விதிகளில் விதி 8 உடன் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை கீழ் குறிப்பிட்டுள்ள தேதியில் சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன்மூலம் வழங்கப்படும் எச்சரிக்கையாவது: கீழே குறிப்பிட்ட சொத்துடன் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள வேண்டாம்; மேலும் மேற்கூறிய சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் கீழே குறிப்பிட்ட தொகைக்காக, அதற்குரிய செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் வட்டி உட்பட அனைத்து பிற நிலுவைத் தொகைகளுடன் சேர்த்து பூனாவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) வசூலுக்கு உட்படும்.

கடன்தாரர் மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 மற்றும் துணைப் பிரிவு (8) இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துகளை மீட்பதற்காகத் தரப்பட்டுள்ள கால அவகாசத்தைத் தெரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுவாதீனம் செய்யப்பட்டுள்ள சொத்துகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்(கள்) பெயர்	அடமான சொத்து விவரங்கள்:	சுவாதீன செய்த நாள்:	சட்டப்படி கோரிக்கை அறிவிப்பு வழங்கிய நாள்	கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை (ரூ.)
1.	திருமலை கோதண்டராமன், நிஷாந்தினி சுப்ரமணி	புதிய S.No.649/1h&649/1h1, சர்வே எண்.649, மனை எண்.7, அம்மூர் கிராமம், வாலாஜா வட்டம், ராணிபேட்டை மாவட்டம், தமிழ்நாடு–632501 இல் உள்ள 1566 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய அடமானம் வைக்கப்பட்ட சொத்து. **எல்லைகள்: கிழக்கு:** சுப்ரமணியின் மனை, **மேற்கு:** சத்யாவின் மனை, **வடக்கு:** அரசின் காலி நிலம், **தெற்கு:** 12 அடி சாலை.	07.12.2023	13.09.2023	கடன் எண்: HF/0111/H/20/100115 13.09.2023 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.8,23,353.52/– (ரூபாய் எட்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று மற்றும் பைசா ஐம்பத்திரண்டு மட்டும்) மற்றும் அதுவரையிலான ஆண்டு வட்டி 9.90 சதவீதம் உட்பட.
2.	சுமித்ரா S, ரவி பொன்னுசாமி	S.F.No.118a/5, S.F.No.116a/5a1a1a1, மனை எண்.25, கொண்டசமுத்திரம் கிராமம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம், தமிழ்நாடு–632602 இல் அமைந்துள்ள 768 ச.அடி பரப்பளவு அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய அடமானம் வைக்கப்பட்ட சொத்து. **எல்லைகள்: கிழக்கு:** திரு.சங்கருக்குச் சொந்தமான காலி நிலம், **மேற்கு:** திரு.நடராஜுவுக்குச் சொந்தமான நிலம், **வடக்கு:** 20 அடி சாலை, **தெற்கு:** பழனிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம்.	08.12.2023	13.09.2023	கடன் எண்: HF/0111/H/21/100044 13.09.2023 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.4,81,090.74/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து தொன்னூறு மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) மற்றும் அதுவரையிலான ஆண்டு வட்டி 17.5 சதவீதம் உட்பட. கடன் எண்: HM/0111/H/19/100004 13.09.2023 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.7,12,389.64/– (ரூபாய் ஏழு இலட்சத்து பன்னிரண்டு ஆயிரத்து முந்நூற்று எண்பத்தொன்பது மற்றும் பைசா அறு பத்து நான்கு மட்டும்) மற்றும் அதுவரையிலான ஆண்டு வட்டி 16 சதவீதம் உட்பட.

இடம் : வேலூர்
நாள் : 13.12.2023
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின், (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)

டாக்டர் மருதுபாண்டியன் இறப்புக்கு பணிச்சுமை காரணம் இல்லை

ராஜிவ் காந்தி மருத்துவமனை விளக்கம்

சென்னை, டிச.13:.சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ராஜிவ் காந்தி பொது மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கை:

மருத்துவர் மருது பாண்டியன் (வயது 30) சென்னை மருத்துவ கல்லூரியில் பொது அறுவையியல் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டார். அதில் தேர்ச்சி பெற்ற பின், சென்னை மருத்துவக் கல்லூரியிலேயே பொது அறுவையியல் துறையில் உதவி அறுவை சிகிச்சை பேராசிரியராக இருந்தார்.

இதனிடையில், ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூளைச் சாவு ஏற்பட்ட நபரிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட கல்லீரல், ஒரு கல்லீரல் செயலிழப்பு நோயாளிக்குப் பொருத்தும் அறுவை சிகிச்சை நடைபெற்றது.

மாற்று கல்லீரல் அறுவை சிகிச்சை செய்யப்படும் முறை குறித்து அறிந்து கொள்ளும் ஆர்வத்தில், மருத்துவர் மருது பாண்டியன் தானாகவே அங்கு சென்று பார்வையாளராக இருந்தார். அறுவை சிகிச்சையிலோ, சிகிச்சைக்குப் பின் நோயாளியின் கண்காணிப்பிலோ, அவருக்கு எந்தவிதப் பொறுப்பும் வழங்கப்படவில்லை.

அவரது அகால மரணம் சென்னை மருத்துவ கல்லூரியின் மருத்துவர்கள் மற்றும் நிர்வாகத்தினரை துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரது இறப்பிற்கான காரணம் முறையான உறுப்புப் பரிசோதனை முடிந்த பின்னர் தான் தெரியவரும். பணிச் சுமையால் அவர் இறந்து விட்டார் என்ற கருத்தும், தொடர்ந்து 36 மணி நேரம் பணியில் இருந்தார் என்பதும் முற்றிலும் தவறானது என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக, பூனவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036.
கிளை அலகு: எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், **பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும்,** கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 28.12.2023 தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B)	சுவாதீனத் தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணயவிலையில் %10) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
கடன் எண்: HM/0111/H/17/100361 R.தீபா (கடன்தாரர்), C ராமதாஸ் (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி:26.05.2022 மொத்த நிலுவைத் தொகை: 26.05.2022 தேதியின் படி ரூ.4,85,569.67/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று அறுபத்தொன்பது மற்றும் பைசா அறுபத்தேழு மட்டும்) மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டு 15.25% வட்டிவீதத்திலான வட்டி.	கையக சுவாதீனம்	வேலூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், ஆம்பூர் இணை சார் பதிவு மாவட்டம், ஆம்பூர் வட்டம், குமாரமங்கலம் கிராமம், பட்டா எண்.284 இன் படி, நத்தம் பழைய சர்வே எண்.44/2, புதிய சர்வே எண்.44/6 இல் அடங்கியுள்ள 1087 ச.அடி அல்லது 101 ச.மீட்டர் பரப்பளவு உள்ள அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் கட்டுமானம் மற்றும் மின் இணைப்பும் அடங்கிய நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து. **தெற்கில்:** கிருஷ்ணனுக்குச் சொந்தமான வீடு, **வடக்கில்:** கண்ணனுக்குச் சொந்தமான வீடு, **மேற்கில்:** ஜெயசீலனுக்கு சொந்தமான வீடு, **கிழக்கில்:** தெரு.	Rs. 9,29,644/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு மட்டும்)	Rs. 92,964.40/- (ரூபாய் தொன்னூற்று இரண்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்கு மற்றும் பைசா நாற்பது மட்டும்)	27.12.2023 மாலை 5.00 மணிக்குள்	10,000/-	21.12.2023 (11 AM– 4 PM)	28.12.2023 (11 AM– 2 PM)	ஒன்றுமில்லை
கடன் எண்: HM/0111/H/16/100160 R.சதீஷ்குமார் (கடன்தாரர்), ராஜேந்திரன், கோவிந்தராஜ் (உப–கடன்தாரர்)	அறிவிப்பு தேதி:30.04.2022 மொத்த நிலுவைத் தொகை: 30.04.2022 தேதியின் படி ரூ.7,85,873.84/– (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டுக்கு 13.05% வட்டிவீதத்திலான வட்டி.	கையக சுவாதீனம்	வேலூர் பதிவு மாவட்டம், காட்பாடி இணை சார் பதிவு மாவட்டம், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், மதாந்தகுப்பம் கிராமம், கொல்லபுரிஅம்மன் நகர், சர்வே எண்.54/1, மனை எண்.12 இல் அடங்கியுள்ள 957 மற்றும் ½ ச.அடி பரப்பளவு உள்ள அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து	Rs. 9,61,013/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபத்தோராயிரத்து பதின்மூன்று மட்டும்)	Rs.96,101.30/- (ரூபாய் தொன்னூற்று ஆறு ஆயிரத்து நூற்று ஒரு ரூபாய் மற்றும் பைசா முப்பது மட்டும்)	27.12.2023 மாலை 5.00 மணிக்குள்	10,000/-	21.12.2023 (11 AM– 4 PM)	28.12.2023 (11 AM– 2 PM)	ஒன்றுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் **C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: வினோத் சௌகான், மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com, தொடர்பு எண்.9813887931 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம்** இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். **ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை** (EMD) NEFT/RTGS/DD மூலமாக பூனாவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20,R.N. Mukherjee road, Kolkata–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 27.12.2023 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, **வேலூர்–632004** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். **+91 8588802671** மற்றும் **+91 9567626050** மின்னஞ்சல் முகவரி **Rahul.r1@poonawallahousing.com.** தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & **www.grihumhousing.com**– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

நாள்: 13.12.2023, இடம்: வேலூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் **(முன்னதாக பூனவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)**